பக்கங்கள் 8

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 22 புரட்டாதி 22 ஜூலை-கம் 27 இதழ் 23
யாழ்ப்பாணம் புதன்கிழமை 8 - 10 - 80

RECEIVED 1980-10-8 PERIODICALS DIVISION

பாரசீக வளைகுடாவில்

## சோவியத் பிரவேசம் யு.எஸ்.பாதுகாப்புக்கு அபாயம்

### கார்ட்டர் கருத்து

வாஷிங்டன் அக். 7

ஈரான் - ஈராக் யுத்தம் தொடர்பாக சொந்த முறையில் சோவியத் ஜனதிபதி திரு. பிரெஷ்நேவ்வுடன் தாம் கடிதங்களைப் பரிமாறிக் கொண்டதாக அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மிகார்ட்டர் கூறியுள்ளார்.

கடிதத்தின் உள்ளடக்கம் பற்றி அவர் எதுவும் தெரிவிக்கவில்லை. எனினும் பாரசீக வளைகுடாப் பிரதேசத்தில் பொதுவாக யுத்தமொன்று ஏற்படுவதை சோவியத் யூனியன் விரும்பவில்லை என தாம் நம்புவதாகவும் திரு. கார்ட்டர் கூறினர்.

(8-ம்பக்கம் பார்க்க)

# ஈரான்மீது ஈராக் கடும் யுத்தம்!

# ஜோர்தானும் தயாராகிறது!

## ஈராக்கிலிருந்து இந்தியர் தொடர்ந்து வெளியேற்றம்

லண்டன், அக். 7

ஈரான் மீது, ஈராக் யுத்த விமானங்கள் நேற்று கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டன. ஈரான்-ஈராக் எல்லையைப் பிரிக்கும் கடல் பிரதேசத்தில் நேற்று மிகப்பெரும் குண்டுவீச்சுத்தாக்குதல்கள் நடைபெற்றன.

ஈரான்-ஈராக் சண்டையில் இதுவரை நடைபெறாத மிகப் பெரும் குண்டுவீச்சு நடவடிக்கையை ஈராக் படைகள் நேற்று மேற்கொண்டன என்றும் யுத்த நிறுத்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதை அடுத்து தரை மார்க்கமாகவும் கடல், ஆகாயமார்க்கமாகவும் ஈராக் வெகுவேகமாக முன்னேறிக்கொண்டிருப்பதாகவும் பாக்தாத் செய்திகள் தெரிவிக்கின்றன.

### தொழிற்சாலை சேதம்

இதனையடுத்து ஈரானில் உள்ள மிகப்பெரும் மோட்டார் தொழிற்சாலை உட்பட பல தொழிற்சாலைகள் மீது ஈராக் விமானங்கள் குண்டு வீசித்தாக்கின என்று ஈராக் கூட்டு இராணுவ அறிக்கை தெரிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க ஈராக் துருப்புக்கள் ஈரான் மண்ணை விட்டு வெளியேறும்வரை ஈரான் படைகள் போரை நிறுத்தாது என்று ஈரானிய தளபதி தெரிவித்துள்ளார்.

8-ம் பக்கம் பார்க்க

ஹோம் பினன்ஸ் லிமிட்.

82, கன்னதிட்டி ரேட், யாழ்ப்பாணம்.

வருடாந்தம் ஆகக்கூடுதலான

25% வட்டியை

வழங்குகின்றது

ரூபா 1000/-க்கு மேற்பட்ட எந்த முதலீட்டிற்கும் மாதாந்தம் வட்டி வழங்கப்படும்

உங்கள் பணத்தை விவேகமாக முதலீடு செய்யுங்கள்

தலைமையகம்:
463, காலி வீதி, கொழும்பு-3.
தொலைபேசி : 89190

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

தேசிய லொத்தர்சபையின் 803-வது சுவிப் முடிவுகள் வருமாறு:-

முதலாவது பரிசு
26 T 0229
ரூபா 1,00,000

இரண்டாவது பரிசு
07 N 0495
ரூபா 40,000

மூன்றாவது பரிசு
2) Q 0953
ரூபா 10,000

(8ம் பக்கம் பார்க்க)

## லயன்ஸ் கழகத்தின் உலக சேவை தினம்

[யாழ்ப்பாணம்]

உலகின் 153 நாடுகளிலுள்ள 33,558 லயன்ஸ் கழகங்களிலுள்ள ஒருகோடியே 3,50,000 அங்கத்தவர்கள் இன்றைய தினத்தை உலக சேவைத்தினமாகப் பிரகடனப்படுத்தி இன்று கொண்டாடுகின்றனர்.

இத்தினத்தையொட்டி இன்று யாழ். லயன்ஸ் கழகம் யாழ். மாவட்டத்திலுள்ள சகல அநாதை இல்லங்கள், வயோதிப இல்லங்கள், வலது குறைந்த சிறுவர் இல்லங்கள் ஆகியவற்றில் வசிப்பவர்களுக்கு இலவச வைத்திய சிகிச்சை அளிக்கவுள்ளது.

குறிப்பாக கண்நோய், பல் வியாதி போன்றவற்றுக்கு கூடுதல் கவனம் செலுத்தப்படும்.

யாழ். மாவட்டத்தின் சில பாடசாலைகளில் உலக சேவை தினத்தின் முக்கியத்துவம் பற்றி யாழ். லயன்ஸ் கழக அங்கத்தவர்கள் இன்று உரையாற்றுவர். [வெ]

## 38,000 ரூபா கொள்ளை! வதிரியில் சம்பவம்

[யாழ்ப்பாணம்]

கரவெட்டி கிழக்கிலுள்ள வதிரிஎன்னுமிடத்தில்,இரவு நேரத்தில் வீடு உடைக்கப்பட்டு ரூ. 38,080 பெறுமதியான நகைகளும் மற்றும் விலைஉயர்ந்த பொருள்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன!

வதிரியிலுள்ள திருஞானசம்பந்தர் சிவபாக்கியம் என்பவரது வீட்டிலேயே இத்திருட்டுச சம்பவம் நிகழ்ந்துள்ளது.

வீட்டிலிருந்தவர்கள் உறக்கத்திலிருந்தபோது யன்னல் உடைக்கப்பட்டு வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள், முப்பத்தெட்டாயிரத்து எண்பது ரூபா பெறுமதியான நகைகளையும் மற்றும் விலைஉயர்ந்த பொருள்களையும் திருடிச்சென்றுள்ளனர். நள்ளிரவு நேரத்தில் நடந்த இத்திருட்டுபற்றி வீட்டுக்காரர்களுக்கு காலையில் தான் தெரியவந்ததாம்! இச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு நிகழ்ந்தது.

யாழ். ஆஸ்பத்திரியில்

## மூன்று குழந்தைகளை பிரசவித்த இளம் பெண்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில், முதல் பிரசவத்தில் மூன்று அழகிய ஆண் குழந்தைகளுக்கு 22 வயது இளம் பெண் தாயானர்.

யாழ். ஆஸ்பத்திரி 2-ம் வாட்டில் அனுமதிக்கப்பட்ட சுன்னுகம் மயிலணியைச் சேர்ந்த 22 வயதான திருமதி உருத்திராடம் செல்லையாவே 3 குழந்தையை பிரசவித்தவராவார்.

முதல் குழந்தை இம்மாதம் 4-ம் திகதி அதிகாலை 3-55 மணிக்கும் இரண்டாவது குழந்தை 7-28 மணிக்கும் மூன்ருவது குழந்தை 7-30 மணிக்கும் பிறந்தன.

முதல் குழந்தையின் நிறை 4½ றுத்தல், 2-ம் குழந்தையின்

8-ம் பக்கம் பார்க்க

## தங்கத்தின் விலை அதிகரித்தது

லண்டன், அக். 7

லண்டனில் தங்கத்தின் விலை 15 டாலர் அதிகரித்துள்ளது என அறிவிக்கப்பட்டது.

செம்பு டியூப்புகள் TWYFORD (ENGLISH)
வர்ண & வெள்ளை பாத்றூம் செட்டுகள் - 1750/- 24,750/-
அலுமினியம் பூ தகடுகள் (Aluminium Diamond Sheet) 8' X 3' – 250 -
யூனியன் & யேல் கதவுப் பூட்டுகள் (ENGLISH) 225|- – 300 -
வியாபாரிகளுக்கு சலுகை உண்டு.
இறக்குமதியாளர்கள்:-
றம்ஸன்ஸ் ஹாட்வெயர் எண்டர்பிரைஸ் லிமிட்டெட்,
443, பழைய சோனகத்தெரு, கொழும்பு-12. தொலைபேசி: 21511.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

EN - மொறிஸ் மைனர் எண்ணாயிரம் வரிசை பதிவு இலக்கம் உடைய தனிப் பாவனைக்கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு - "இராஜஸ்தான்" 5-ம் கட்டை முன்னல், ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய். 7014

வட்டுக்கோட்டைத்தொகுதி அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பாற்பண்ணைத் திட்டம் சித்தன்கேணியில் மூன்று நல்லினப் பசுமாடுகளை 14-10-80 செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு விற்பனை செய்யவுள்ளது. 7017

யாழ். மாநகரசபை எல்லையிலிருந்து 3 மைலும் பிரதான வீதியிலிருந்து 50 யார் தூரத்திலும் தென்னை, மா, பலா, தோடை மரங்களடங்கிய ஏழேகால் பரப்பளவுள்ள சதுரக்காணியில் 2 படுக்கை அறைகளுடன் கூடிய ஓரளவு பழைய வீடு உடனடியாக விற்பனைக்குண்டு. அமைதியான சிறந்த சுற்றுடல் குறைந்த பட்சம் ஒன்றேகால் இலட்சத்துக்கு விலை கேட்போர் விபரங்கட்கு விண்ணப்பிக்கவும். விளம்பர எண் 7019 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 7019

## பட்டப் பின் படிப்புகளுக்குப் பதிவு செய்தல் 1981

பின்வரும் பாடங்களில் 1981-ஆம் ஆண்டுக்கு முதுகலைமாணி தத்துவ கலாநிதி ஆகிய பாடங்களுக்குப் பதிவு செய்து கொள்ள விருப்புடைய தகமை பெற்ற ஆட்களிடமிருந்து 1980 நவம்பர் 14-ம் திகதி வரை என்னால் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பொருளியல், புவியியல், இந்து நாகரீகம், வரலாறு, தமிழ், சமஸ்கிருதம் 9"×4" அளவுடைய சுய முகவரியிடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையொன்றை அனுப்பி விண்ணப்பப் படிவங்களையும் உரிய விபரங்களையும் கல்விக் கிளையில் உதவிப் பதிவாளரிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
யாழ்ப்பாணம்,
19£0 - 10 - 03. 7018

## வெற்றுச்சாக்கு கேள்வி விளம்பரம்

கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தில் 7000 க்கும் மேற்பட்ட வெற்றுச்சாக்குகள் கேள்விமூலம் விற்பனைக்கு இருக்கின்றன. ரூபா 25-00 மேற்படி சங்கத்தில் கட்டி கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். சீல் வைத்த கேள்விப் பத்திரங்கள் யாவும் 15-10-80 ந் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன்னதாக பதிவுத் தபால்மூலம் "பொது முகாமையாளர், கட்டைவேலி —நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி" என்னும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரம் அனுப்பும் தபால் உறையில் இடது பக்க மேல்மூலையில் "வெற்றுச் சாக்குக்கான கேள்வி" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
கட்டைவேலி—நெல்லியடி
ப. நோ. கூ. சங்கம்.
கரவெட்டி,
2-10-80.
7008

## ஆராய்ச்சியில் பதவி உயர்வு

(மன்னார்)
அண்மையில் நெல் ஆராய்ச்சி சம்பந்தமான மேற்படிப்புக்காக பிலிப்பைன்ஸ் நாட்டிற்குச் சென்று திரும்பிய வட்டுக்கோட்டை, முருங்கன் அரசினர் ஆராய்ச்சிப் பண்ணையின் அலுவலராகவும் கடமையாற்றிய திரு. இ. செல்வராஜா ஆராய்ச்சியாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பால்
"கிலீன் ஆல்" (CLEAN ALL)
தொற்று நாசினியின் விலை
போத்தல் ஒன்றுக்கு ரூபா 10 -
ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதென்பதை வருத்தத்துடன் அறியத்தருகிறேம்.
தங்கள் ஆதரவை நாடும்
ஜயந்தி என்ரபிறைசஸ்
ஆவரங்கால், புத்தூர். 7021

நடேஸ்வராக் கல்லூரி காங்கேசன்துறை
### பிரிவுபசார விழா

முன்னைநாள் அதிபர் திரு. பொன். சோமசுந்தரம் அவர்களுக்கு மாணவர்களும், அபிவிருத்திச் சபையும் இணைந்து நடாத்தும் பிரிவுபசார விழா 09-10-80 வியாழக்கிழமை மாலை 6 மணிக்குக் கல்லூரி முன்றலில் நடைபெறும்.

இவ்வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு பெற்றோர், பழைய மாணவர், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்
(7016) அபிவிருத்திச்சபையினர்

### கராட்டிப் பிரியர்களுக்கோர் நற்செய்தி!

புரூஸ்லியின் போஸ்டர்கள், புத்தகங்கள், படங்கள் விற்பனைக்குண்டு

| | | |
|---|---|---|
| BRUCELEE | 20"x30" கலர் போஸ்டர் | ரூபா 35/- |
| | போட்டோ | ரூபா 15/- |
| | புத்தகங்கள் | ரூபா 35/- |
| | 50 ஸ்டிக்கர் கொண்ட 6 காட் | ரூபா 150/- |
| | 5 ஸ்டிக்கர் கொண்ட ஒரு காட் | ரூபா 35/- |

மற்றும் GB, USA, All Countries ஸ்டிக்கர்கள் விற்பனைக்குண்டு. வி. பி. பி. அனுப்பப்படும்.
வர்த்தக விசாரணைகள்:
ஆழிக்குமரன் ஆனந்தன் ஏஜென்சீஸ்
உடுப்பிட்டி வீதி — வல்வெட்டித்துறை
கொழும்பில் தலைமைக்காரியாலயம் உண்டு.
போன்; 36106. (7013)

## ஈட்டு விற்பனவு விபரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்
வழக்கு இல. எம். பி./14295

வயிரவநாதர் செல்லத்துரை-மவுண் காமல் ரேட்டு குருநகர், யாழ்ப்பாணம் —வழக்காளி

எதிராக

1. சூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளையும்
2. பெண் பிலோமினுவும்—மாதகல்

பிரதிவாதிகள்

ஈடு 14295 ஆம் வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதனம் [1980 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாசம் 29-ம் திகதி (29-10-1980) புதன்கிழமை காலை பத்து மணி தொடக்கம் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதலும் வட்டியும் ரூபா 7610/- மேலும் இதில் 4950/- ரூபாவுக்கு 8-3-1974 தொடக்கம் 25-3-1975 வரை வருடமொன்றுக்கு 12% வீத வட்டியும் அதன்பின் சேர்ந்த முழுத்தொகைக்கும் இறக்கும்வரை வருடமொன்றுக்கு 5% வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 4:5,65 சகமும் விற்பனவுச் சலார்களும் இதில் ரூபா 300/- வழக்குச் செலவால் கொடுபட்டுள்ளது.

### ஆதன விபரம்

வடமாகாணம் [யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி பண்டத்தருப்பு கோவிற்பற்று மாதகலிறை 'நமச்சிவாய தோட்டமும், இராசாவத்தையும், காரியத்தோட்டமும் பீக்கொட்டிக்கிளாலையும், தலைதீக்கியும்' நிலப்பரப்பு 4. குளி 3ம் வீடும் கிணறும் இதற்கு எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை, மேற்கு கைஒழுங்கையும் கயித்தாம்பிள்ளை செல்வராசாவுக்குரிய காணியும் தெற்கு பேதுருப்பிள்ளை கவுரிமேற்பிள்ளைகளுக்குரிய காணி இதடங்கலும்.

ம. வீ. த. கனகராசா
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்
விலைமதிப்பாளரும்

'ஆனந்த வாசா',
43, குமாரசாமி ரேட்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். 7002

## மதுபோதையில் வந்த இளைஞர் தற்கொலை?

[மாவிட்டபுரம்]
மது போதையில் வந்த 18 வயது இளைஞர் தாய் ஏசியதை அடுத்து நஞ்சருந்தி மரணமானர்.

சுன்னுகத்தைச் சேர்ந்த கந்தசாமி குணேந்திரன் (18 வயது) என்பவரே இம்முடிவைத் தேடியவராவார்.

காலஞ்சென்றவர் அளவுக்கு மிஞ்சிய மது போதையில் வீட்டுக்கு வந்த சமயம் தாயார் அவரைக் கண்டித்ததாகவும், "தந்தையும் ஏற்கனவே ரகலமாகிவிட்டதால் கூடப்பிறந்த 4 பெண் சகோதரிகளையும் வாழவைக்க வேண்டிய பொறுப்புள்ள நீ இப்படிச் செய்யலாமா?" என தாயார் ஏசியதைப் பொறுக்கமாட்டாத அவ் இளைஞர் நஞ்சு அருந்தியதாகவும் விசாரணையில் தெரிய வந்தது.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா விசாரணை நடத்தி தற்கொலை என தீர்ப்பளித்தார்.

சுன்னுகம் பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர். [இ]

## 'பொதுமக்கள் பொலிசாருடன் ஒத்துழைக்கவேண்டும்'

### புதிய ஏ.எஸ்.பி.'நவம்' வேண்டுகோள்

(தெல்லிப்பழை)
"சுமுகமான முறையில், இலகுவான வழியில் பிரச்னைகளைத் தீர்க்கக்கூடியவகையில், பொதுமக்கள் பொலிஸாருடன் ஒத்துழைக்கவேண்டும். பொலிஸாரின் கடமைகளை பொது மக்கள் செய்யவிடாது எதிர்ப்பைக் காட்டினுல், இரு பகுதிகளிடையேயும் பிரச்னைகள் வலுக்கும். ஆதலால் பொது மக்கள் பொலிஸாருடன் கண்ணியமான முறையில், அவர்களும் மனிதர்கள் தான் என்று மதித்து நடக்கப் பழகவேண்டும்."

ஏழாலை - கட்டுவன் தெற்கு-மேற்கு பாரதி சனசமூக நிலையத்தினரால், யாழ். மாவட்ட முதல் பிரிவுக்கு உதவிப் பொலிஸ் அதிபராகப் பதவி உயர்வு பெற்றுவந்துள்ள திரு. எஸ். எஸ். நவரத்தினராசா தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

திரு. ந. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு. நவரத்தினராசா மேலும் பேசுகையில்,

"வாலிபர்கள் தவறான செயல்களில் ஈடுபடக்கூடாது. சமூகத்தின் நல்ல வழிகாட்டிகளாக வாழப் பழகிக்கொள்ள வேண்டும். தங்களைப்போல அயலவரையும் நேசிக்கவேண்டும்.

"முற்காலத்தில் பொலிஸ் நிலையமோ-கோடுகளோ இருக்கவில்லை பஞ்சாயத்து சபைகள் மூலமே மக்கள் பிரச்னைகளைத் தீர்த்திருக்கிறர்கள். இதுபோன்ற பொதுசன - பொலிஸ் நட்புறவுச் சபைகளை

(7-ம் பக்கம் பார்க்க)

National
நெஷனல்
மல்ரி குக்கர்
உங்கள் எரிபொருள் செலவைக் குறையுங்கள்.

சோறு, கறிவகைகள், இரசம் முதலான
உணவை முன்னிலும் பார்க்க வெகு
விரைவாக சமைப்பதற்கு
மல்ரி குக்கர் பாவியுங்கள்.
சமைக்கும் உணவின் சுவை மாறுதிருப்
பதற்கு ஏற்றவாறு உருவமைக்கப்பட்டது.
இதனை இயக்குவதும் சுலபம்-
அதாவது "புஷ்பட்டன்" முறை..



கிடைக்குமிடம்:
நெஷனல் காட்சியறை
84, மெயின் வீதி, கொழும்பு 11.
தொலைபேசி: 36259, 27970 மற்றும்
235, காலி ரேட், கொழும்பு 4.

பிரதிநிதிகள்:
யுனி வோக்கர்ஸ் லிமிட்டெட்

விலை ரூ. 1090 –

Mel Ads 652

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஹொரம்சர்' நகரை ஈராக் கைப்பற்றவில்லை!

## ஈரான் மறுப்பு

லண்டன், அக். 7

ஈரானின் பெரும் துறைமுகநகரான 'ஹொரம்சஹர்' ஈராக் படைகள் கைப்பற்றியுள்ளதாக ஈராக் அறிவித்துள்ள போதிலும் 'ஹொரம்சர்' நகர் தொடர்ந்தும் தமது படைகளின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருப்பதாக ஈரான் அறிவித்துள்ளது.

'ஹொரம்சர்' நகரை ஈராக் படைகள் கைப்பற்றவில்லை: ஈராக்குக்குள் இருந்தே 'ஹொரம்சர்' மீது ஈராக்கிய படைகள் தாக்குதல் நடத்தி வருவதாகவும் ஈரான் அறிவித்துள்ளது.

### 7 ஈராக் விமானங்கள் சுடப்பட்டன

ஈரானின் பல்வேறு பகுதிகளிலும் தாக்குதல் நடத்திய ஏழு ஈராக்கிய விமானங்களை ஈரான் படைகள் சுட்டுவீழ்த்தின என்றும், மூன்று ஈராக் 'மிக்' விமானங்கள் தெஹ்ரான் மீது தாக்குதல் நடத்தின என்றும் ஈரான் தெரிவித்துள்ளது. (இ)

## மத்திய கிழக்கு துறைமுகங்களில் 24 இந்தியக் கப்பல்கள்

புதுடில்லி, அக். 7

ஈரான்-ஈராக் யுத்தத்தினால் 24 இந்தியக் கப்பல்கள் மத்திய கிழக்கு துறைமுகங்களில் தடைப்பட்டுள்ளன என்றும், அக்கப்பல்களிலுள்ள சிப்பந்திகள் நலத்துடன் இருப்பதாகவும் இந்திய வெளிநாட்டு அமைச்சு அறிவித்துள்ளது. (இ)

## சந்தனக்கட்டை

சென்னை, அக். 7

தமிழ்நாட்டிலிருந்துசந்தனக் கட்டைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யுமாறு தமிழக அரசு மத்திய அரசை மீண்டும் வற்புறுத்தியுள்ளது.

சந்தனக் கட்டை ஏற்றுமதியை மத்தியஅரசு தற்போது தடைசெய்துள்ளது. (இ)

## நானாட்டான் விசேட ஆணையாளர்

(மன்னார்)

நானாட்டான் கிழக்கு கிராம சபையின் விசேட ஆணையாளராக திரு. சந்தாம்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார்.

### ஆலய பரிபாலகர்

மடு வீதி சிங்கள மகாவித்தியாலயத்தில் தமிழ் ஆசிரியராகக் கடமையாற்றும் கவியரசு முருகசூரியன், மடு வீதி விநாயகர் ஆலய பரிபாலனசபையின் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## பனைவள ஆராய்ச்சியை உடன் ஆரம்பிக்கவும்

### விவசாயப் பல்கலைக்கழகத்திடம் தமிழக அமைச்சர் கோரிக்கை

சென்னை, அக். 7

'பனைவளஆராய்ச்சியை தமிழக விவசாயப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கவேண்டும்.

இவ்வாறு தமிழ்நாடு கைத்தறி, கதர், கிராமியக் கைத்தொழில்அமைச்சர் திரு. எஸ். என். இராஜேந்திரன் கோரியுள்ளார்.

திருநெல்வேலியில் நடைபெற்ற 'பனைவளம்' பற்றிய கருத்தரங்கொன்றில் பேசுகையிலேயே அமைச்சர் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

பல்வேறு பனைத்தொழிற்சாலைகளை நிறுவுவது குறித்து தமிழக அரசு பரிசீலித்துவருவதாகவும் சீவல் தொழிலாடர்களுக்கு அரச, கோவில் காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். (இ)

## புதுடில்லியில் தமிழ் கலாசார நிலையம்

### தமிழக அரசு நிறுவும்

சென்னை, அக். 7

புதுடில்லியில் வாழும் ஒரு லட்சம் தமிழ்மக்களின் நன்மை கருதியும் தமிழ்மொழியில் அக்கறை கொண்டுள்ள தமிழர் அல்லாதவர்களின் நன்மை கருதியும் புதுடில்லியில் தமிழ் கலாசார நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

புதுடில்லியிலுள்ள தமிழ்நாடு இல்லத்தில் இக்கலாசார நிலையத்தை அமைக்க தமிழக அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையத்தில் தமிழ் நூலகம் ஒன்று அமைக்கப்படுவதுடன் கலைப் பொருட்கள், இசைத்தட்டுகள், ஒலிப்பதிவு நாடாக்கள் ஆகியனவும் வைக்கப்படும். கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (இ)

## மன்னார் இந்து பேரவைக்கு உதவி

[மன்னார்]

மன்னார் இந்து பேரவை அலுவலகக் கட்டடம் ஒன்றை அமைக்கவென திருக்கேதீஸ்வரத்தில் வழங்கப்பட்ட காணியில், இந்து பேரவை அலுவலகக் கட்டிடம் அமைக்க 45 ஆயிரம் ரூபா வழங்கப்படுமென தன்னைச் சந்தித்த இந்து பேரவைத் தலைவர் திரு. த. குமாரசாமி தலைமையில் சென்ற குழுவிடம் பிராந்திய அபிவிருத்தி, இந்து கலாச்சார அமைச்சர் திரு. செ. இராசதுரை கூறினார்.

## வலைகளை நிலத்தில் புதைத்தபோது பிடிபட்டார்

(மாவிட்டபுரம்)

கடலில் வைத்து அறுக்கப்பட்டதாகக் கருதப்படும் 3 மீன்பிடிவலைகளை நிலத்தில் புதைத்துக்கொண்டிருந்த போது அங்கு திடீர் வேட்டையிலிறங்கிய காங்கேசன் துறைப் பொலிசார் இவ்வலைகளையும் நபர் ஒருவரையும் கைது செய்தனர்.

மயிலிட்டியில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடலில் விரிக்கப்பட்டிருந்த 3 சூடைவலைகளைக் களவாடிய இருநபர்கள் அவற்றை நிலத்தில் புதைத்துவைக்க முயன்ற சமயம் இரகசியத்தகவலின் பேரில் அங்கு சென்ற காங்கேசன்துறைப் பொலிசார் அவர்களில் இராஜரத்தினம் மகேஸ்வரன் என்பவரைக் கைது செய்ததுடன் வலைகளையும் கைப்பற்றினர். மற்றைய நபர் தப்பியோடிவிட்டார்.

விசாரணை தொடர்ந்துநடைபெறுகிறது.

## யாருடையது?

நல்லூர் அரசடி வீதியில் இருநெல்வேலிக்குச் செல்லும் வீதியில் நல்லூர் வடக்கைச் சேர்ந்த எ. வாசன் என்பவரால் கண்டெடுக்கப்பட்ட திறப்புக்கோர்வை ஒன்று 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர்கள் தகுந்த அத்தாட்சி காட்டிப்பெற்றுக் கொள்ளவும்.


# டியுறேல்

# அப்பிள் பழச்சுவையுள்ள, இரும்புச்சத்து நிறைந்த, பிள்ளைகளுக்கான விற்றமின் பாணி.





பூச்சிக் கோளாறு, உங்கள் பிள்ளைகளுக்குப் பெரும் சோகையை உண்டாக்கி கடும் பலவீனத்தை ஏற்படுத்தி சக்தியை இழக்கச் செய்கிறது.

இரும்புச் சத்தும், பீ கொம்பிளெக்சும் கொண்ட பிள்ளைகளுக்கான டியுறேல், இரத்த விருத்தியை அதிகரிக்கச் செய்து, போஷாக்குக் குறைவு, பலவீனம் ஆகியவற்றை எதிர்க்கிறது.

பிள்ளைகளுக்கான டியுறேல் பாணி மதுசாரமற்றது. அத்துடன் உங்கள் பிள்ளைகள் பெரிதும் விரும்பும் அப்பிள் பழச் சுவையுடையது.

உங்களது பிள்ளை களைப்புற்று, சோர்வடைந்திருக்கும் போது மீண்டும் மெருகூட்டி சுறுசுறுப்பாக்க சக்திச் செறிவும், விற்றமின்களும் கொண்ட பிள்ளைகளுக்கேயுரிய டியுறேல் கொடுங்கள், அதுவே பலவீனத்தைப் பறக்கச் செய்கிறது....
அதுவே பலம் வழங்குகிறது.

**ஒவ்வொரு கரண்டி பிள்ளைகளுக்கான டியுறேலிலும் இரும்புச்சத்து நிரம்பியிருக்கிறது.**

சில்லறை விலை 170 மிலீ. - ரூ. 13/75

Grant K & E 3254


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பணம் நமக்குப் பெற்றுத் தருவதெல்லாம் சோறும் கறியுமேயாகும். பணத்தையே உன்னுடைய உயிரும் உடலுமெனவோ உனது ஒரே குறியும் நோக்குமெனவோ கருதாதே.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

## நமது நோக்கு

### தொடரும் யுத்தம்

ஈரானுக்கும் ஈராக்கிற்குமிடையில் நடந்து கொண்டிருக்கும் யுத்தத்தை எவரும் தடுக்கமுடியாது போல் தெரிகிறது.

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் கட்டளை மீறப்பட்டது இதுவே முதற் தடவை என்றுகொள்ள முடியாது. தீயை உடனடியாக அணைக்கும் திட்டம் இந்த உலக சமாதான ஸ்தாபனத்துக்கு என்றுமே இருந்ததில்லை.

இந்த அவல நிலையில் இ எங்கள் இலங்கையைப் போன்றது. இலங்கையிலே அண்மையில் பலகட்டிடங்கள் தீப்பிடித்துச் சாம்பராயின. சென்றகிழமை கொழும்புக் கோட்டையில் உள்ள கிறின்ட்லேய்ஸ் வங்கி தீ விபத்துக்குள்ளானதும் பல கோடி ரூபாய் நட்டத்தை அது ஏற்படுத்தியதும் நாடறிந்த விடய. தீயை உடனடியாக அணைக்க முடியாத நிலை, அழிவுக்குப்பின் அதன் காரணத்தை ஆராய்வதில் தாமதம் எமது நாட்டைப் பீடித்திருக்குமாப்போல் ஐ நா சபையும் உலகில் சடுதியாக எழும் யுத்தத் தீயைத் தடுக்கவோ, அணைக்கவோ இயலாது திண்டாடுகிறது.

உலக ஸ்தாபனத்துக்கு இந்தப் போர் ஒருதுாசம் பவம்போல் தோன்றும். அண்டைநாடுகள் தமது செல்வாக்குக் கொண்டு சமாதானத்தை ஏற்படுத்த முடியுமென்று அது கனவு காண்பதும் இயல்பு. இவ்வித முயற்சியை அண்டை நாடுகள் எடுத்து வெற்றி கிட்டவில்லை.

தொடரும் போர் எவ்விதம் திரும்பும் என்று வல்லரசுகளுக்கே தெரியாமலிருக்கலாம். சதுரங்கம் சிக்கல் மேற்சிக்கலுக்குள்ளாகி வருகிறது. முரண்பாட்டு நிலையை முக்கியமான இரு நாடுகளான இந்தியாவும் பாகிஸ்தானும் உணர்த்துகின்றன.

ஈராக்குக்கும், ஈரானுக்கும் பிரதமர் இந்திரா காந்தி போரை நிறுத்தி பிரச்னைகளை அமைதியாகத் தீர்த்துக் கொள்ளுமாறு வற்புறுத்தி கடிதங்களைத் தனித்தனியாக எழுதியிருப்பதாகச் செய்தி கூறுகிறது. இந்தியா இப்போரில் கடும் நடுநிலைமை வகித்துவருவது கண்கூடு. கூட்டுச்சேரா இயக்கத்தை இப்போர் பலவீனப்படுத்தும் என்பது பிரதமர் இந்திராவின் உறுதியான கருத்து. போர் நீடிக்குமானால் வல்லரசுகள் நேரில் தலையிட நேரிடும் என்பதும் அவருடைய அச்சம்.

பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஷியாவுல் ஹக் தமக்குரிய ராணுவ ஞானத்துடன் இப்பிரச்னையை அணுகுவது ஆச்சரியமல்ல. சோவியத் யூனியன் தங்கள் மீதும் ஈரான் மீதும் எந்நேரமும்தாக்குதல்நடத்தும் என்பதே அவருடைய அச்சமாகும். அமெரிக்காவை யிட்டு அதிபருக்கு அதிகபயமில்லைப்போலும்.

ஈரான் கடும்பிடியாக இருக்கிறது என்ற செய்தியே எங்கும் பேசப்படுகிறது. அதன் எச்சரிக்கை பல அரபுநாடுகளில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சவூதி அரேபியா ஈரானுக்கு எதிராகவே கங்கணம் கட்டிவருகிறது. அமெரிக்கா அதற்கு ராடார் விமானங்களை அனுப்பிவருகிறது. ஈரான் எந்த நிலையிலும் அமெரிக்காவை நம்பி நடக்கமாட்டாது. அதேசமயம் ரஷ்ய ராஜதந்திரத்திற்கும் இடமளிக்காதென நம்ப இடமுண்டு.

பாரசீகக்குடாப் பிராந்தியம்தான் யுத்தக்களரிக்கு உகந்த இடமென்று நாம் சாத்திரம் சொல்ல முன்வரவில்லை. ஆப்கான் விவகாரத்தில் கவலைகொண்ட அமெரிக்கா, அங்கு ரஷ்யத் தலையீடு குறைந்தபாடில்லை என்பதில் மனம்தளர்ந்திருக்கிறது. அங்கு அமைதியற்ற நிலையில் ரஷ்யப் படை நீண்டகாலம் நிலைத்திருப்பதற்கு அந்த நாடு சொல்லும் சாட்டையும் நாம் கவனத்திற் கொள்ளவேண்டும். தாங்கள் விலகியதும் அமெரிக்கா-சீனு தலையிட்டுப் பழைய பிற்போக்கான ஆட்சியை காபூலில் அமைக்க முயலுமென்பதே!

இந்துசமுத்திரமே வல்லரசுப் போட்டிக்கு உகந்த இடமாகக் காட்சியளிக்கிறது. அணிசேரா நாடுகள் நடுநிலைமை வகிப்பது இன்றைய சிக்கலான சூழ்நிலையில் முடியாத காரியம். இந்தியா ரஷ்யாவின் எதிர்ப்பை என்றுமே விரும்பியதில்லை. பாகிஸ்தான் அமெரிக்க உதவியை நம்பி இந்திய உபகண்டத்தில் மீண்டும் ஏமாற்றமடையத் தயங்கமாட்டாது.

எனவே வல்லரசுகள் இவ்வித பிரச்னைகளைத் தந்திரமாகத் தமக்குச் சார்பாகத் தீர்த்துவிடலாமென நம்புகின்றன.

சிறு மோதல்களை விட உலகமகா யுத்தம் அணு-ஆயுதமின்றி நடைபெற மாட்டாதென்பது தெரிந்த விடயம். அணு-ஆயுத யுத்த சென்றுல் ...ர்த்தம் என்ன என்பது அவைக்குத்தான் தெரியும்.

## மாணவர்கள் வீட்டுத் தோட்டம் செய்வது அவசியம்

(பண்டத்தரிப்பு)

'வாழ்க்கைச் செலவு மிகவும் அதிகரித்துள்ள இக்காலகட்டத்தில் எமது பகுதியிலுள்ள மூலவளங்களை நன்கு பயன்படுத்தி எமக்கு அன்றுடம் தேவையான பொருட்களை நாமே உற்பத்திசெய்யவேண்டியது அவசியமானதாகும். இந்த வகையில் ஒவ்வொரு பாடசாலை மாணவனும், மாணவியும் தங்கள் வீடுகளில் மரக்கறிகளை உற்பத்திசெய்யக் கூடிய வீட்டுத்தோட்டத்தை உருவாக்கவேண்டும். இதற்கு தேவையான ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கி ஊக்குவிப்பதற்கு விவசாயத் திணைக்களம் தயாராக உள்ளது.'

இவ்வாறு வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகமும் விவசாய இலாகாவும் இணைந்து நடாத்திய மூன்று நாள் கருத்தரங்கில் மூன்றும்நாள்நிகழ்ச்சியின் போது பிரதம அதிதியாகக் கலந்துகொண்டுஉரையாற்றிய யாழ்மாவட்ட விவசாயஉத்தியோகத்தர் திரு. அன்றூ ஜோசவ் குறிப்பிட்டார்.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் வீட்டுத் தோட்டச் செய்கைபற்றி கமத்தொழில் போதனாசிரியர் திரு. எ. கிருஷ்ணர்கோழி வளர்ப்புப்பற்றியும் திருநெல்வேலி விவசாயப் பாடசாலை போதனாசிரியர் திருமதி எஸ். சிவசுப்பிரமணியம், பயிர்ப் பாதுகாப்புப்பற்றியும் திரு. அர். எப். தம்பிநாயகம் ஆகியோர் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார்கள். வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகந் தலைவர் திரு. க. அருணுசலம் தலைமையில் நடைபெற்ற இறுதிநாள் கருத்தரங்கில் லயன்ஸ் கழகத்தை சேர்ந்த சட்டத்தரணி கே. குணரத்தினம், திரு. உ. ந. தேவகடாட்சம் ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.

இக்கருத்தரங்கில் பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழ்களை திரு. பாலன் செல்லையா வழங்கினர். லயன்ஸ் கழகச் செயலாளர் டாக்டர் எமில் அத்தனசியார் நன்றியுரை கூறினர்.

## மல்லாகம் சதாசகாய மாதாதேவாலயத்தில் மாணவருக்கான ஆராதனை

வழமைப்பிரகாரம் வருடாவருடம் பரீட்சார்த்திகளுக்கென நடாத்தப்படும் நவநாள் ஆராதனைகள் மல்லாகம் சதா சகாய மாதா ஆலயத்தில் இன்று புதன்கிழமைமாலை ஆரம்பமாகின்றது.

வற்றுத அருட்சுனையாகிய சதா சகாயத்தாயின் சலுகையை நம்பிக்கையுடன் வேண்டியவர்களை அவர் என்றும் கைநெகிழ்ந்ததில்லை. தங்கள்முயற்சிக்கேற்ற பலனை அளிக்கும்படி சதா சகாய மாதாவை வாரந்தோறும் பிள்ளைக்குரியபரிவுடன் வேண்டிநிற்கும் பரீட்சார்த்திகளின் சாட்சி மனதை உருக்கியவண்ணமாயிருக்கும். உள்ளங்கனிந்தநன்றியுடன் பரீட்சையின் பெறுபேறுகள் வெளிவந்ததும் சகாய அன்னைக்கு நன்றிகூறும் பிள்ளைகளின் தொகையும் அனந்தம்.

பாடசாலை மாணவர்களுக்கு வசதியாக இந்த நாள் ஆராதனைகள் இன்று பிற்பகல் 5 மணிக்கு ஆரம்பமாகின்றன. அன்புத் தாயின் ஆசியை அடைய இந் நவநாளில் நம்பிக்கைநிறைந்த உள்ளங்களுடன் பங்குபற்றுவோமாக.

-பங்குத்தந்தை

## மக்கள் கருத்து

### யாழ். மாநகரசபை கவனிக்குமா?

யாழ்ப்பாணம் கலட்டிமச் சந்தி பிறவுண் வீதி வாசிகளாகிய நாம் கடந்த ஒரு வருடகாலமாக, மாநகரசபையினரின் நடவடிக்கையினுல் பாதிக்கப்பட்டு வருவதுமன்றி மாநகர சபையின் மீதுள்ள நம்பிக்கையையும் இழந்து வருகின்றோம். பிறவுண் வீதியில் கழிவு நீரோட்டத்திற்காக கட்டப்பட்டதாக கருதப்படும் கான் ஒன்று (30 யார் தூரத்திற் மட்டுமே) மழை நீரைத் தேக்கி வைக்கும் தாங்கியாக மாறி நுளம்புகளின் வளர்ச்சிக்கும், துர்நாற்றத்தின் இருப்பிடத்திற்கும் சிறந்த ஒரு இடமாக மாறியிருக்கின்றது கடந்த பல மாதங்களாக மாநகரசபையின் உயர் அதிகாரிகள், சுகாதாரப் பகுதியினர், மேயர், உதவி முதல்வர் ஆகியோருக்கு பல கடிதங்கள் எழுதியும் எவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை ... வது. இவ்விடயத்தை மாநகர ... கவனித்து ... நட... எ...ம்.

நா. சண்முகப்
யாழ்ப்பாணம்.

# யாழ்ப்பாணத்தில் 1000 புதிய மோட்டார்சைக்கிள்கள் பதி...

## பழைய லொறிகள் இரண்டு வீதிகளில் ஓடத்தடை!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த 6 மாத காலத்தில் 1000 புதிய மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

யாழ். மோட்டார் வாகன பதிவு காரியாலயத்தில் தினமும் மோட்டார் சைக்கிள் பதிவு செய்யும் விண்ணப்பங்கள் வந்துகொண்டேயிருக்கின்றன.

புதிதாக மோட்டார் சைக்கிள் செலுத்துவதற்கு லைசென்ஸ் பெறுவோர் தொகையும் அதிகரித்துவருகிறது. மோட்டார் சைக்கிள் லைசென்ஸ் பெறுபவர்களில் சில பெண்களும் அடங்கியுள்ளனர்.

மோட்டார் கார் மற்றும் வாகனங்களுக்கு லைசென்ஸ் பெறுவோரும் அதிகரித்துள்ளனர்.

வீதிகளில் பாவிப்புக்கு உதவாதெனக் கருதப்பட்ட இரு லொறிகளை, யாழ். மோட்டார் கமிஷனர் திரு. ஆர். எஸ். வாரசிங்கா, வீதிகளில் ஓடக்கூடாதென தடை விதித்துள்ளார்.

ஒரு லொறியை யாழ். பொலிஸாரும், மற்ற லொறியைச் சாவகச்சேரி பொலிஸாரும் மோட்டார் கமிஷனரின் கவனத்திற்குக் கொண்டுவந்ததைத் தொடர்ந்துஅவர் இந்த தடையை விதித்துள்ளார்.

வீதிகளில் போக்குவரத்... உதவாதெனக் கருதப்... வாகனங்களை பொலி... கண்காணித்துவருகின்ற... இவற்றினுல் பொதுமக்க... ஆபத்துண்டென்றும், விபத்துக்கள் ஏற்படுவதா... பொலிஸார் கருதுகின்ற...

### சிறப்புரை

(சுழிபுரம்)

நவராத்திரியைஒட்டி ... யின் அருள்பெற்ற ... ளர்கள் என்ற தலைப்பில் ... மாதம் 10ம் திகதி முதல் ... 6.30 மணிமுதல் வழ... டாரை அம்மன் கோவ... சைவமணி, வித்துவான் ... மு. சபாரத்தினம் அரு... வழங்குவார், தொட... பது தினங்களும் நவரா...

பொன் ...


இஷ்டே...

ஆலயத்திலும் சரி, வீட்டிலும் சரி எமது கிராமிய ம...
பான நல் வாழ்வைத் தான் ஒளியாகவும், மனை...
வேண்டுதல்களைப் பூர்த்தி செய்கிறது தெய்வ...
பூமியே மிகப்பெரிய சொத்தாகும். பொன் விளையு...
...களுக்கு ஒரு முக்கிய செய்தி. ஒவ்வொரு விவசாயின் கவனத்திற்கும் ...
தங்கள மண்ணின் வளத்தை முழுமையாகப் பெறவேண்டுமென ஆ...
பூர்த்திசெய்ய வழி செய்யும் செய்தியே அது ...
பயனையும் பெற வழி செய்திருக்கின்ற...
நீண்ட கால ஆராய்ச்சியின் பயனுக, விவசாயி
யின் நெடு நாள் ஆவலைப் பூர்த்திசெய்ய, வரப்
பிரசாதமாக இன்று கிடைக்கிறது.

ஹினே மோட்டோ

''ஹினே மோட்டோ''
டிராக்டாகள பல நாள் முயற்சி யின் பலா பலன் தான்
ஹினே மோட்டோ, எமது நாட்டின் செழிப்புக்கு ஒரு உற்ற துணை
'ஹினே மோட்டோ' டிராக்டர்கள் எங்கும்
எபபொழுதும எமது தேவைகளை நிறைவேற்றும் வகையில்
...ரிககபபடடுள்ளன மஹா இலுப்பலமவியுள்ள விவசாய உபகரண
பரீட்சார்த்த நிலையத்தில் பரிடசிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுள்ளது
'ஹினே மோட்டோ' இதற்காகச் செலவிடும் 95,000 ரூபா ஒரு
விவசாயின் வாழ்வில் புதுமலர்ச்சியை நிச்சயமாக வழங்கும்.

E 280
31 ஹோர்ஸ் பவர் ரூபா.95,000/-



விற்பனை, சேவை, உதிரிப்பாகங்கள் ஆகியவற்றிற்கு
ஏக முகவர்கள்:

கொன்சொலி டேற்றெட...
எஞ்ஜினியரிங் கொம்ப...
101 கிங்ரோட கொழும்பு 2, தொலைபேசி: 35009, 35464

ZENITH

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 00 புதிய ...ள் பதிவு

...திகளில் போக்குவரத்துக்கு ...யாதெனக் கருதப்படும் ...னங்களை பொலிஸார் ...காணித்துவருகின்றனர். ...ற்றினால் பொதுமக்களுக்கு ...த்துண்டென்றும், விதி ...த்துக்கள் ஏற்படுவதாகவும் ...லிஸார் கருதுகின்றனர். (௬)

## சிறப்புரை

(சுழிபுரம்)

...ராத்திரியையொட்டி சக்தி ... அருள்பெற்ற அருளா ...ள் என்ற தலைப்பில் இம் ...ம் 10ம் திகதி முதல்மாலை ... மணிமுதல் வழக்கம் ... அம்மன் கோவிலில் ...மணி, வித்துவான் திரு. ...பாரத்தினம் அருளுரை ...துவார், தொடர்ந்துஒன் ...தினங்களும் நவராத்திரி கொலுக்காட்சியும், கூட்டுவழி...ாடும் தினமும் நடைபெறும்.

# வேலைநீக்கக் கடிதம் பெற்ற வாலிபர் தற்கொலை

[பண்டத்தரிப்பு]

வேலை நீக்கக் கடிதம் கிடைக்கப்பெற்ற வாலிபர் ஒருவர் அதைத் தாங்கிக்கொள்ள முடியாது மனமுடைந்து கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்துகொண்டார். இப்பரிதாப சம்பவம் தொல்புரத்தில் நடைபெற்றுள்ளது. தொல்புரம் பத்தானைக் கேணியடியைச் சேர்ந்த கனகசபை நடராஜா என்பவரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டவராவர். இவரது மரணவிசாரணை திடீர் மரண விசாரணை அதிகாரியும் உத்தியோகப்பற்றற்ற நீதவானுமாகிய கே. சேனாதிராசா முன்னிலையில் நடைபெற்றது. அத்தருணம் காலமானவரின் தாயார் கனகசபை பூரணம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

எனது மகன் தொழிற்சாலை ஒன்றில் மெஷின் மெக்கானிக்காக வேலை பார்த்துவந்தார் சில வாரங்களாக அவர் வேலைக்குச் செல்லாது வீட்டில் இருந்தார். கடந்த வாரம் அவரை வேலையிலிருந்து நீக்குவதாகக் கடிதம் நிர்வாகத்திடமிருந்து வந்தது. இதனையடுத்து அவர் மிகவும் மனவேதனையடைந்த நிலையில் இருக்கக் காணப்பட்டார். சம்பவதினத்தன்று மடத்துக்கரைப் பிள்ளையார் கோவிலடியில் கிருமிநாசினி அருந்திய நிலையில் அவர் மயங்கிக் கிடப்பதாக அயலவர்கள் வந்து சொல்லவே நான் அங்கு சென்று பார்த்தேன். அவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் உயிர் பிரிந்துவிட்டது. இவரது மரணத்தில் எனக்கு எவர்மீதும் சந்தேகம் இல்லை.

காலஞ் சென்றவரின் மைத்துனர் கணபதிப்பிள்ளை குணரத்தினமும் சாட்சியமளித்தார் விசாரணை முடிவில் தற்கொலை என்று மரண விசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்னார். சாட்சிகளை சங்கானைப் பொலிசைச் சேர்ந்த ஜி. ரூபின்சன் ஆஜர் செய்தார்.

# யாழ். கச்சேரியில் குடும்ப கட்டுப்பாட்டு ஊக்கப் பணம்!

(யாழ்ப்பாணம்)

குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் சிகிச்சை பெற்றவர்கள் யாழ் அரசாங்க செயலக திட்டமிடல் பிரிவில் ஊக்குவிப்பு பணம் பெற்றுக் கொண்டனர் இவர்களில் பெண்களே கூடுதலாகக் காணப்பட்டனர்.

கடந்த மாதம் வரை ஊக்குவிப்பு பணமாக 100 ரூபாவே வழங்கப்பட்டு வந்தது. அக்டோபர் முதல் இப்பணம் 500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

குடும்பத்தில் கணவன் மனைவி இருவரும் இந்த சிகிச்சையை செய்துகொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரி, தெல்லிப்பளை அரசினர் ஆஸ்பத்திரி ஆகியவற்றில் மட்டுமே குடும்பத்திட்ட சிகிச்சை செய்ய அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

சிகிச்சை பெற்றபின் டாக்டரிடம் பெற்றுக்கொள்ளும் அத்தாட்சிப்பத்திரத்தை யாழ் அரசாங்க செயலக (கச்சேரி மேல் மாடியிலுள்ள திட்டமிடல் பகுதியில் சமர்ப்பித்து ஊக்குவிப்பு பணத்தை பெற்றுக் கொள்ளலாம்.

கடந்தமாதம்வரை சிகிச்சை பெற்றவர்களுக்கே நேற்று திட்டமிடப் பகுதியில் ஊக்குவிப்பு பணமான 100 வழங்கப்பட்டது. இம்மாதம் சிகிச்சை பெற்றவர்களுக்கான 500 ரூபா கொடுப்பனவு இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

இந்த 500 ரூபா கொடுப்பனவு விரைவில் வழங்க பூர்வாங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

குடும்பக்கட்டுப்பாட்டு திட்டத்தின் கீழ் சிகிச்சை பெற்றவர்களே நேரில் வந்து பணத்தை பெறவேண்டுமென்றும் அடையாள அட்டை அவசியம் கொண்டு வரவேண்டும் என்றும் சம்பந்தப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

திட்டமிடல் பகுதியில் செவ்வாய், வியாழன் ஆகிய இரு நாட்களில் மட்டுமே ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படும். (௬)

# மட்டுநகர் தொலைபேசி 23-ந் தேதி இயங்கும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு புகையிரத நிலைய வீதியில் புதிதாக இரண்டரைக் கோடிரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் தன்னியக்க தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் எதிர்வரும் 23-ந் திகதி முதல் செயல்படவுள்ளது.

ஜப்பான் ஒத்துழைப்புடன் அமைந்த இந்நிலையம் செயல்படத் தொடங்கியதும் மட்டக்களப்பு மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான மட்டக்களப்பு - கொழும்பு நேரடித் தொலைத் தொடர்பு வசதி அன்று முதல் ஏற்படுத்தப்படும்.

இத்தகவலை மட்டுநகர் முதல்வரும், பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செல்லையா இராசதுரை தெரிவித்தார்.


...ன் விளையும் பூமியின் ...ட்டதேவதை

...மது கிராமிய மக்கள் தெய்வங்களை வேண்டுவது பாதுகாப் ...ளியாகவும், மழையாகவும், காற்றாகவும் இயங்கி மக்களின் ...ய்கிறது தெய்வம் பூமித்தாயை நம்பி வாழும் விவசாயிக்கு ... பொன் விளையும் பூமியை நம்பியிருக்கும் எமது கிராமிய ...வனத்திற்கும் கொண்டுவரப்பட வேண்டிய முக்கிய செய்தி ...வேண்டுமென ஆவல் கொண்டுள்ள அவர்களின் ஆசையைப் ...சய்தியே அது வாகும். இஷ்டதேவதைகள் பூமியின் முழுப் ...செய்திருக்கின்றன.

...கு, விவசாயி ...செய்ய, வரப் ...டைக்கிறது.

...டோ

...ட்டோ" ...ன் தான் ...ற துணை ... எங்கும் ...கையில் ...பகரண ...றுள்ளது ...ரூபா ஒரு ...வழங்கும்.

...000/-

...யேவற்றிற்கு




HINOMOTO



விசேட மிதப்புச் சக்கரங்கள்...




நீர் தூசு சற்றும் புகாத பிரேக்குகளும் இளக்கம் ஈரக் காணியை உழுதற் குரியவை



சுழல் கருவி நெல் வயலுக்கேற்ற அரிவாள் அலகு அல்லது மேட்டு நிலத்துக்கேற்ற உளி முனைகள் கொண்டது.



பிற இலகு பார ட்ராக்டர்களாலோ எருமைகளாலோ கூடச் சங்கடப்படுத்தும் சகதி நிலத்திலியக்குதற்குரியவை.



ஸ்பிரிங் வாருகோலியும் மட்டப்படுத்தும் அலகும் நிலத்தை இறுதியாக ஒப்புரவாக்குதற்குரியது.

எந்த ரகத் தராதர ட்ரெயிலரையும் இழுக்கக் கூடியது

எரிபொருட் சிக்கனம் ●
மண் வளம் பாதுகாப்புபாசன நீர் ●
கீழ் மண் பாதுகாப்பு ●

2 சிலிண்டர் டீசல் எஞ்சின் ●
விருப்பமான மேலதிக உறுப்பு கள் உண்டு ●
நீண்டகால தொல்லையற்ற பாவனைக்குரியது ●
15 வேகம் 12 முன்புறம் 3 பின்புறம் ●

...ட்றெட்
...கொம்பனி லிமிட்டெட்
...09, 35464


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "தமிழரின் ஒற்றுமையைக் கண்டே அரசியலமைப்பில் தமிழ் இடம்பெற்றது"

## இதை நிலைநாட்டவேண்டும் என்கிறார் வட்டு. எம். பி.

(பண்டத்தரிப்பு)

'கடந்த பொதுத்தேர்தலில் தமிழ் மக்கள் ஒற்றுமையாக கூட்டணி எம். பிக்களை அதிகப்படியான வாக்குகளால் தெரிவுசெய்து பாராளுமன்றம் அனுப்பியபடியால்தான் இந்த அரசு தனது புதிய அரசியல் அமைப்பில் நாம் கேட்காமலே தமிழ்மொழியை நாட்டின் தேசிய மொழியாகவும், வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழியாகவும் இடம்பெறச்செய்தது. அந்த ஒற்றுமையை நாம் தொடர்ந்தும் கட்டிக் காக்கவேண்டியது அவசியமானதாகும்.'

இவ்வாறு வடலியடைப்பு கலைவாணி சனசமூக நிலையத்தினரால் நடாத்தப்பட்ட கருத்தரங்கில் 'இன்றைய அரசியல் நிலை' என்னும் விடயம் பற்றி உரையாற்றுகையில் வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு குறிப்பிட்டார். ஆசிரியர் திரு. எஸ். மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் திரு. திருநாவுக்கரசு தொடர்ந்து குறிப்பிட்டதாவது:

'எமதுஅடிப்படை இலட்சியமான தமிழ் ஈழக் கோரிக்கையை கூட்டணியினராகிய நாம் இந்த அரசிடம் அடகு வைத்து மாவட்ட அபிவிருத்திச்சபைகளைப் பெறவில்லை. தமிழ்ஈழத்திற்குமாற்றுமருந்து தான் மாவட்ட அபிருத்திச் சபை என்று அரசாங்கமோ, நாமோ கூறவில்லை. இந்நாட்டின் உள்ளூராட்சிச்சேவையை மேலும் விஸ்தரிப்பதன் பொருட்டும் அபிவிருத்தித் திட்டங்களை அந்த அந்த பிரதேசமக்கள் நேரடியாக பங்கெடுத்து நடைமுறைப்படுத்து முகமாகவும், இந்த அபிவிருத்திச் சபைகளை அரசு கொண்டு வந்தது. எமது பகுதியை அபிவிருத்தி செய்வதில் நாமும் பங்கேற்பதில் என்ன தவறு இருக்கிறது? சில தம்பிமார் இதுபற்றிபிரச்சினை எழுப்பிதவறுனமுறையில் பிரச்சாரம்செய்துவருகின்றனர். இதற்காகவே மக்கள்மத்தியில் சென்று நாம் எமசு நிலைப்பாட்டை விபரமாகத் தெரிவித்து வருகின்றோம்.,

இக்கருத்தரங்கில் வண்ணை ஆனந்தன் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

'பேரம்பேசி ஒப்பந்தங்கள் செய்து கூட்டணி இந்த மாவட்ட அபிவிருத்திக் சபைகளைய்ஆதரித்துருந்தால் அதை எதிர்க்கும் முதல் நபராக நான் இருப்பேன். தமிழ் ஈழக் கோரிக்கைக்கு பாதகமில்லாத வகையில் எமது பிரதேசங்களை பாலகாக்கவும் பொருளாதாரத்துறையில் அபிவிருத்திசெய்யவும் இந்த மாவட்ட அபிவிருத்திச்சபைகள்உதவும் என்பதில் எமக்குச் சந்தேகமில்லை. இலாப நட்டக் கணக்கு பார்த்து கூட்டணியில் இணைந்த சிலரும் சொந்த ஆசாபாசங்களுக்காகச் சிலரும் தாம் எதிர்பார்த்தவை கிடைக்கவில்லை என்ற விரக்தியினால் இச்சபைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்துவருகின்றனர். வேறு சிலர் கருத்து மயக்கத்தினால் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

'தனிநபர் பயங்கரவாதத்தினால் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாது. தேசிய இனம் முழுமையாக சேர்ந்து போராடவேண்டும் என்ற மாமேதை லெனின் கருத்தை நாம் மறந்துவிடக் கூடாது.'

திரு. நாக பத்மநாதனும் உரையாற்றினர்.

## மயிலிட்டியில் சுய உதவியில் 45 வீடுகள்

(மாவிட்டபுரம்)

மயிலிட்டி, வடக்கு மயிலுக் கட்டுவளில்சுயஉதவிவீடமைப்புத்திட்டத்தின்கீழ் 45 வீடுகள் கட்டப்படவிருக்கின்றன, இதற்கான அடிக்கல்லை காங்கேசன்துறை எம். பி.யும் எதிர்க்கட்சித்தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் நாட்டி வைத்தார்.

மயிலிட்டி வடக்கு கிராம சேவையாளர் திரு. வ. தில்லை நடராசா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திருமதி. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், வீடமைப்புத்திட்ட அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரி திரு. பொன்னம்பலம், திரு. வே. மாணிக்கம் உட்படப் பலர் உரையாற்றினர். (ச)

## தன்னியக்க தொலைபேசி நிலையம்

(நெல்லியடி)-

கோப்பாய் சந்திக்கருகாமையில் அமைக்கப்பட்டு வரும் தன்னியக்க தொலைபேசிநிலைய வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. 50 தொலைபேசி இணைப்புகளுடன் இம்மாதம் 14ம் திகதி இந் நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளதாக வட பிராந்திய பிரதம தந்தி தொலைத் தொடர்பு பொறியியலாளர் திரு. கே, சண்முக வடிவேல் தெரிவித்துள்ளார்.

கோப்பாய் பகுதியில் மேலும் 15 பேர் இணைப்புக்களைக் கோரி விண்ணப்பித்துள்ளதாவுகம் அவர் தெரிவித்தார் (க)

## கப்பல்சேவை நிறுத்தம்; பிரயாணிகள் அதிகரிப்பு

[மன்னார்]

தலைமன்னார் - ராமேஸ்வரம் கப்பல் சேவை இம்மாதம் 16-ம் திகதியுடன் நிறுத்தப்படும். காலநிலை சீர்கேடு காரணமாக இக் கப்பல் சேவை நிறுத்தப்படுகிறது. கப்பல் சேவை மீண்டும் ஜனவரி 5-ம் திகதி ஆரம்பமாகும்.

கப்பல் சேவை இம்மாதம் 16-ம் திகதியுடன் இடைநிறுத்தம் செய்யப்படுவதால் தலைமன்னாரில் பிரயாணிகள் தொகை அதிகரித்துள்ளது. தினமும் 600 க்கு மேற்பட்ட பிரயாணிகள் கப்பலில் இடம் கிடைக்காததால் தலைமன்னாரில் தங்கிச் செல்கிறார்கள். இதேவேளை இந்தியா சென்று வரும் பிரயாணிகளுக்கு ரயில்வே திணைக்களம் வழங்கி வந்த சென்று வருவதற்கான ரிக்கற்றுகள் நிறுத்தப்பட்டு விட்டன.

## ப. நோ. கூ. ச. கிளையில் ரூ. 20,000 புடவைகள் கொள்ளை

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் சந்தியிலுள்ள மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் புடவை விற்பனை நிலையலைத்தில் இரவு நேரத்தில் ஓட்டைப் பிரித்து உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த சுமார் 20 ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க சாறிகள், விலையுயர்ந்த வெளிநாட்டு காற்சட்டைத் துணிகள் ஆகியவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இக்கொள்ளைச் சம்பவம் பற்றி ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து பொலிஸ் சார்ஜண்ட் திரு. தில்லன் துரை தலைமையில் சென்ற பொலிஸ்கோஷ்டி ஸ்தலத்திற்கு விரைந்து தீவிர விசாரணை நடத்தியது. கை விரல் அடையாளங்களும் படமும் பிடிக்கப்பட்டன. அண்மையில் சங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட விலையுயர்ந்தவெளிநாட்டுச் சாறிகள் சூட்டிங் வகைகள் ஆகியனஉட்பட சுமார் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான துணிவகைகள் கொள்ளையடிக்கப்பட்டதாக சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கடந்த ஆறுமாத காலத்தில் இச்சங்கத்தின் பல்வேறு கிளைகளிலும் இது போன்றபுடவைத்திருட்டுச்சம்பவங்கள் பல நடைபெற்றுள்ளதென்றும் இது திட்டமிட்ட ஒரு கோஷ்டியின் செயலே என்றும் பொலிசார் தெரிவித்தனர். விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. (இ)






## ஆயுள்வேத மருந்துகள் இல்லை

(சுழிபுரம்)

சுழிபுரம் கிராம சபை வைத்தியசாலையில் பல மருந்து வகைகள் இல்லாததால் நோயாளர்கள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர். முக்கியமான மருந்துகள் ஆயுள்வேத கூட்டுத்தாபனத்தில் வாங்கக் கூடிய வாய்ப்புக்கள் இருந்தும் விசேட ஆணையாளர் இல்லாததால் மருந்துவகைகளை வாங்க முடியாமல் உள்ளதாக வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். தினமும் ஐம்பதுக்கு மேற்பட்ட நோயாளர்கள் மருந்து பெற்று வருவதால் மருந்து வகைகளின் தேவை அதிகமாக வேண்டியுள்ளதாம். வடபகுதியில் முதல் முதல் ஸ்தாபிக்கப்பட்ட சுழிபுரம் கிராம சபை ஆயுள்வேத வைத்தியசாலையில் மருந்து பெற்று வரும் நோயாளர்கள் பூரணகுணம் அடைவதுடன் சிறந்த வைத்திய சேவையைப் பெற்று வருகின்றனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30,
சனி-ஞாயிறு 2-30
நாகேஷ் - சௌ ார் ஜானகி
ஆ ல ய ம்

நாகம்ஸ் (சுன்னுகம்)
தினசரி 6-30, 930
சனி, ஞாயிறு 2-15
ரஜனிகாந்த் -
படாபட் ஜயலக்ஷ்மி
ஆறிலிருந்து
அறுபதுவரை

## கிளிநொச்சி இரட்டைக்கொலைவழக்கு

# "கிணற்றடியில் நின்ற 100 பேரில் எவரும் குதிக்க முன்வரவில்லை

## நான் தான் குதித்து 2 பிள்ளைகளையும் தூக்கினேன்"

### தந்தை சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

''கிணற்றைச்சுற்றி 100பேர் வரை நின்ருர்கள். எவரும் கிணற்றில் குதித்து பிள்ளைகளை தூக்கவில்லை. தண்ணீரை கண்டு பயந்து குதிக்கவில்லை. நான் தான் கிணற்றில் குதித்து பிள்ளைகளை தூக்கினேன்.

கிளிநொச்சி இரட்டை கொலை வழக்கில் சாட்சியமளித்த தந்தை ஆண்டி செல்லையா குறுக்கு விசாரணையின் போது மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனுப். எம். ஜாமில் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ் வழக்கில் கிளிநொச்சியில் 79 ஜனவரி 19ம் தேதி செல்லையா ராஜேந்திரத்தையும், செல்லையா சந்திரனையும் கிணற்றில் போட்டு கொலை செய்ததாகவும் செ, யோகேஸ்வரியை கொலை செய்ய முயற்சித்ததாகவும், மேனகாதேவி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி இராஜராஜேஸ்வரன் தங்கராசா குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சியமலித்த ஆண்டி செல்லையா மேலும் கூறியதாவது:

''பிள்ளைகளை கிணற்றுக்குள்ளிருந்து எடுத்த சமயம் நாகம்மா சாகப்போகிறேன் என்று அழத் தொடங்கினுர். கிணற்றுக்குள் குதிக்கப் பாவதாக கூறினுர். நாகம்மா கடும் கவலையாக கிணற்றில் பாயமுற்பட ஆட்கள் தடுத்தார்கள்.

சட்:- சுகவீனமாக இருந்து சாவதிலும் பார்க்க கிணற்றில் விழுந்து சாவது பெரும் கவலையாக இருக்கும்? - ஆம்,

சட்:- ஆட்கள் மறித்திருக்காவிடில் நாகம்மா கிணற்றில் குதித்திருப்பார்? - ஆட்கள் தடுத்தார்கள்.

சட்:- பிள்ளைகள் விழுந்தபடியால் தான் நான் ஏன் வாழ வேண்டும் என குதிக்கப்பார்த்தார்? - ஒரு முறை சாகப் போகின்றேன் என்று கூறினுர்.

சட்:- கிணற்றில் விழுந்ததை அறிந்தவுடன் நாகம்மாவிற்கு அளப்பரிய கவலையாக கிணற்றில் இருந்து குழந்தையை எடுத்த நேரம் நாகம்மா முகத்தை பார்க்க முடியாமலிருந்தது? - அதுபற்றி எனக்கு தெரியாது. கிணற்றிலிருந்து குழந்தையை வெளியில் எடுத்ததும் எனக்கு ஒரு மாதிரி மயக்கமாக இருந்தது? -

சட்:- நாகம்மாவுக்கும், குழந்தையை எடுத்ததும் மயக்கமாக இருந்ததாக கூறினுர். இது என்ன தொற்று வியாதியா? - எனக்குத் தெரியாது.

சட்:- எந்தப் பிள்ளையை எடுத்தபின் மயக்கம் வந்தது? இரண்டாவது பிள்ளையை.

சட்:- 2ம் பிள்ளையை எடுத்தபோது நாகம்மா குதிக்கப் போகிறேன் என்ருர்? - 1ம் பிள்ளையை எடுத்த பின் 2ம் பிள்ளையை எடுத்தேன். அப்போது குளறினுர்.

சட்:- கத்தினதுகேட்டதா? ஆம்.

சட்: நாகம்மாவுக்குஅதிர்ச்சியாக இருந்தது? - எனக்கு தெரியாது.

சட்:- பிள்ளைகளை எடுக்க முன் கவலைப்படவில்லையா? - கவலையுடன் தான் குளறினேன்.

சட்:: எடுத்தபின் கூடக் கவலையாக இருந்தது? - ஆம்.

சட்:- பிள்ளை உயிருடன் இருந்திருந்தால் கவலை வந்திராது? - (மௌனம்)

சட்:- எதிரிதரப்பு சட்டத்தரணி கேட்டால் ஆம் என்று சொல்லக்கூடாது என யாரும் சொல்லிதந்தார்களா? - இல்லை.

சட்!- பிள்ளை உயிருடன் இருந்தால் கவலை இருக்காது? ஆம்,

சட்:- பிள்ளை மரணமானது கிணற்றிலிருந்து எடுத்தபின் தான் தெரியும்? : ஆம்.

சட்:- பிள்ளை எடுத்தபின் தான் மயக்கம் வந்தது? - ஆம்

சட்:- அந்த நேரம் நாகம்மாவுக்கும் மயக்கம் வந்தது? நாகம்மா கதை எனக்கு எப்படி தெரியும்.

சட்:- கிணற்றடியில் 50பேர் வரை நின்ருர்கள்? - அதற்கும் கூட நின்ருர்கள்.

சட்:- அங்கு நின்ற சுமார் 100 பேரில் ஒருவராவது குதிக்கவில்லை? - நான்தான் குதித்து பிள்ளைகளை எடுத்தேன்.

விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும். விசாரணை இன்று தொடக்கம் பிற்பகலும் நடைபெறும். (க)

## இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 22-ம் திகதி

(புதன்கிழமை)

(8 - 10 -1980)

மேடம்: நண்பர்களே உங்கள் முன்னேற்றத்திற்குத் தடைக்கல்லாக அமைவார்கள், மொட்டைக் கடிதமொன்று சிறிது பரபரப்பை ஏற்படுத்தும், தொழில்துறையில் நஷ்டம் ஏற்படும்.

இடபம்: பொதுத்துறையில் உங்கள் செல்வாக்குப் பெருகும், பொதுமக்களின் ஆதரவு வளர்வதற்கு இடமுண்டு, முன்னுள் ஆசிரியர் ஒருவரின் உதவி உங்கள் முன்னேற்றத்திற்கு உதவும்.

மிதுனம்: செய்தொழிலால் சிறப்புண்டு, புதிய கண்டுபிடிப்புக்களும் இடம்பெறும், பொறியியலாளருக்குப் பொன்னுனநாள், சிலருக்கு அரசினர் விருதும் கிடைக்கலாம்.

கடகம்: வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு பல வழிகளிலும் முயற்சிசெய்வீர்கள், புதுமையான செய்தியொன்றும் கிடைக்கலாம் பொருள் வரவிற்கும் சகோதர சுகத்திற்கும் இன்று இடமுண்டு.

சிங்கம்: எவ்விடயத்திலும் நன்ருக ஆலோசித்தபின்பே முடிவு எடுக்கவும், தொழிலில் கவலை தோன்றும், தொல்லைகள் மிகுந்தநாள், முகமன் கூறுவோர் விடயத்தில் முன் எச்சரிக்கையுடன் நடக்கவும்.

கன்னி: குமுறும் நெஞ்சத்துடன் நாளைக் கடத்துவீர்கள், எதிலும் அவசர முடிவைத் தவிர்த்துக் கொள்ளவும், உடல் நலனில் அதிக கவனம் செலுத்தவும், பிரயாணத்தை இன்று தவிர்க்கவும்.

(8ம் பக்கம் பார்க்க)

## பொது மக்கள்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் அதிபர் திரு. விக்கிரமசூரியா ஆரம்பித்து, கிராமங்களிடையே குற்றச் சம்பவங்கள் நிகழாது நடாத்திவந்தார். இந்த முயற்சி இன்று எவ்வளவோ பலனை அளித்துள்ளது.

''குற்றச் செயல்கள் புரிபவர்களைக் கண்டுபிடிப்பதற்குப் பொதுமக்கள் பொலிஸாருக்கு உதவவேண்டும். வழிப்பறி, கொள்ளை, கொலைச் சம்பவங்கள் நிகழாதிருந்தால், பொலிஸ் நிலையத்துக்கோ நீதிமன்றத்துக்கோ செல்லவேண்டியேற்படாது. மற்றவரையும் மதித்து வாழ நாம் பழகவேண்டும்'' என்ருர்.

மற்றும் கட்டுவன் பொலிஸ்-பொதுசன நட்புறவுச் சபைத் தலைவர் திரு. சி. குகராசா, ஏழாலை நட்புறவுச்சபைத் தலைவர் திரு. க. அம்பலவாணர், திரு. க. தம்பிராசா, திரு. மூ. மூர்த்தி உட்பட பலர் உரையாற்றினர்.

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (ஈ)

WINDSOR (JAFFNA)
Daily at 10-30 a. m, 2-00, 4-30, & 7-00 p. m only
SUSAN HAMPSHIRE, FRANK FINLAY,
MICHAEL PETROVITCH
in
"NEITHER THE SEA NOR THE SAND" Adults only Color

சாந்தி (யாழ்நகர்) போன்: 7642
தினசரி 4 காட்சிகள்
100-வது வெற்றித் திருநாளை நோக்கி......
நீயா? "வெள்ளி விழா"
வண்ணச்சித்திரம்
Next Attraction: "THE DIRTY DOZEN"
எதிர்பாருங்கள்: திசைமாறிய பறவைகள் கலர்

ராணி - யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா
சட்டம் என் கையில்
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

இப்படத்திற்கு மாதர்கள் தரும் ஆதரவிற்கு நன்றி
ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கலைஞர் கருணாநிதியின் கைவண்ணத்தில் உருவான வசனம்.
ஜெய்சங்கர்-ஜெயசித்திரா—அசோகன்
மற்றும் பலர் நடித்த
வண்டிக்காரன் மகன்
(ஈஸ்மன் கலர்)

வெலிங்டன் (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
THE DEEP


லிடோ (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சாவித்திரி
காத்தவராயன்

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — ராதாசலுஜா
இதயக்கனி
எதிர்பாருங்கள்
ஒரேவானம் ஒரேபூமி

ஸ்ரீதர் - யாழ். நகர்
புரட்சிநடிகர் எம்.ஜி.ஆர்.-கவர்ச்சிக்கன்னி லதா
மற்றும் நம்பியார், நாகேஷ், தேங்காய்சீனிவாசன்,
நிர்மலா, மனோரமா ஆகியோர் திறம்பட நடித்தது.
சிறந்த டைரக்டர் ஸ்ரீதர் கைவண்ணத்தில்
உருவாகிய வண்ணப்படைப்பு
மீனவ நண்பன்
இசை: M. S. விஸ்வநாதன்

ஹரன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
தாய்க்கு
ஒரு பிள்ளை

பல்லாண்டின் முன் 1950ல் பம்ப் ஒன்றைச் செய்து அதை "இணைத்து விட்டு இளைப்பாறச்" சொன்னேம் இன்றும் அதையே சொல்கிறேம்!



Mel Ads 1055
சென்ட்றிக்
மனைப் பாவனை நீரிறைக்கும் பம்ப்
நீரிறைக்கும் "சென்ட்றிக்" ரக பம்புகள், நம்பகத்தன்மைக்குப் பிரசித்தி பெற்றவை. ஏனெனில் அவை தரமான மூலப் பொருள் கொண்டு உன்னத உருவமைப்பில் சிறந்த நுட்பத்துடன் தயாரானவை. சர்வதேச தராதரங்களுக்கும் மேம்பட்டவை.
- நுட்பமாய் மனிக்கட்டிட்ட பாரவேலை வார்ப்பிரும்பு கேசிங்
- தேய்மானமற்ற வெண்கல விச்சு கருவி
- தானே மசகிட்டுத் தானே அனுசரித்து இயங்கும் இயந்திர சீல் யுனிட்
- முற்றிலும் மறைப்பிட்டு, விசிறிக் குளிர்ச்சியூட்டி, வலைக் கூடிட்ட ஒற்றை மின்சுற்று மின்சார மோட்டார்: கொழுப்பிடத் தேவையற்ற நிரந்தர போல்-பெயரிங் அதில் சீலிடப்பட்டிருக்கிறது.
சென்ட்றிக் பம்ப்
இணைத்து விட்டுக் கவலையின்றி இளைப்பாருங்கள்
தயாரித்து விற்பனை செய்வோர்
75 YEARS 1905 1980 JINASENA LIMITED
ஜினசேன லிமிட்டெட்
4, உறுப்பிட்டிய ..., கொழும்பு 2.
தொலைபேசி: 26558-9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாராளமாகக்
கிடைக்கின்றன
ஏசியா சைக்கிள்கள்
(ASIA BIKE)

சீனாவிலிருந்தும், ஜப்பானிலிருந்தும் இறக்குமதி செய்யப்படும் சைக்கிள்கள், உதிரிப்பாகங்கள், மின்சார உபகரணங்கள் விற்பனைக்குண்டு.

உங்கள் சைக்கிள்களை தாமதமின்றி நேர்த்தியாக கழற்றிப் பூட்டுவதற்கு நேர்மையான ஸ்தாபனம்.

சி. சண்முகராசா
மடத்தடி, கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.
6970

ஈழநாடு
The Eelanaadu 60 சதம்

# பிரதமர் ஜப்பான் செல்கிறார்

நியூயோர்க் அக். 7 பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா நாளை 5 நாள்விஜயம் ஒன்றை மேற்கொண்டு அமெரிக்காவிலிருந்து ஜப்பான் செல்கிறார். ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றியபின்னர் திரு. பிரேமதாசா அமெரிக்கத் தலைவர்கள் பலரையும் கலந்து பேச்சு நடத்தினார். (இ)

நவராத்திரிகாலத்
தேவி வழிபாடு

| | |
|---|---|
| தேவி தோத்திரத் திரட்டு | 1-50 |
| நவராத்திரிப் பாமாலை | 1-00 |
| சகலகலாவல்லி மாலை | 50 |
| அபிராமி மகிமை | 2-50 |
| அபிராமியந்தாதி | 1-75 |
| அபிராமி அம்மை பதிகம் | 75 |
| மாரியம்மன் தாலாட்டு | 1-75 |

காந்தளகம்
213 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

# இலங்கையில் அரசியல் சுதந்திரத்திற்கு உறுதி

## லொஸ்ஏஞ்சல்ஸில் பிரதமர் பிரேமா

லொஸ் ஏஞ்சல்ஸ், அக். 7 இலங்கையில் அரசியல் சுதந்திரத்திற்கு உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள அதேவேளையில் ஸ்திரமான அரசு அமைக்கப்பட்டுள்ளதுடன் ஸ்திரமான பொருளாதாரத் திட்டம் ஒன்றிற்கும் அத்திபாரம் இடப்பட்டுள்ளது.

இவ்வாறு இலங்கைப் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா லொஸ்ஏஞ்சல்ஸில் கூறினார்.

இலங்கை அமெரிக்க சங்கம் தமக்களித்த வரவேற்பின் போது பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:

உலக நாடுகள் அரசியல் சமூக ஒழுக்கமுறை ஆகியவற்றில் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகி வருகிறது. விஞ்ஞான தொழில் நுட்ப காரணமாக உலகம் சிறிதாக மாறியுள்ளதாலும் உலகநாடுகள் ஒன்றிலொன்று தங்கியிருப்பதினாலும் இவற்றைக் கருத்திற் கொண்டு உலக நாடுகளின் பிரச்னைகள் ஆராயப்படவேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றக்கிடைத்த சந்தர்ப்பத்தின் மூலம் இலங்கையின் அரசியல் பொருளாதார சமூக பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு உலகத் தலைவர்களின் கவனத்தை ஈர்க்க முடிந்தது. இலங்கை மக்களின் கருத்தையும் உலக மக்களின் கருத்தையும் உலக மக்களுழைதக் கூற முடிந்தது, பிரதமரை வரவேற்றுப் பேசிய லொஸ் ஏஞ்சல்ஸ் மாநகரக முதல்வர் திரு. பிரேதாசாவின் வருகையினால் மாநகரம் கௌரவிக்கப்பட்டுள்ளது என்றார். (இ)

# மின் நியோகத் திட்டம்

(சுழிபுரம்)

சுழிபுரம் கிராமசபைப் பகுதி பூராவும மின்வெளிச்சம் ஏற்றுவதற்கான திட்டம் தீட்டப்பட்டுள்ளது. தெரு வெளிச்சம் கிராமசபையிலுள்ள சகல கிராமங்களுக்கும் முதல் வழங்கவேண்டும் எனவும், இதற்கான செலவை வரும் ஆண்டு பெற்றுத்தருமாறு வட்டுக்கோட்டைத் தொகுதி தேசியப் பேரவை உறுப்பினரை கிராமசபை பிரதம விகிதர் வேண்டியுள்ளார். கிராமசபைப் பகுதிக்கு மின்சார சபையினரும் மின்சாரம் வழங்கியுள்ளனர். இப் பகுதியிலுள்ள வீதிகளுக்கும் மின்சாரம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

# சுவீப் முடிவுகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆறுதல் பரிசு பெறும் டிக்கட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 14 A 0590 | 20 A 0307 |
| 23 A 0123 | 01 B 0558 |
| 07 B 0128 | 10 B 0540 |
| 11 B 0192 | 24 B 0833 |
| 29 B 0009 | 31 B 0263 |
| 07 C 0632 | 10 C 0784 |
| 22 C 0086 | 11 D 0300 |
| 15 [illegible] 0443 | 02 E 0815 |
| 06 E 0484 | 13 E 0442 |
| 05 F 0050 | 26 F 0844 |
| 33 F 0360 | 08 G 0049 |
| 12 G 0139 | 15 G 0855 |
| 11 H 0[illegible]08 | 18 H 0730 |
| 20 H 0[illegible]46 | 28 H 0464 |
| 12 J 0442 | 12 J 0485 |
| 13 J 0412 | 30 J 0297 |
| 31 J 0279 | 01 K 0262 |
| 13 K 0185 | 22 K 0540 |
| 22 K 0886 | 31 K 0428 |
| 03 L 0954 | 03 L 0344 |
| 27 L 0823 | 28 L 0296 |
| 03 M 0362 | 03 M 0732 |
| 20 M 0846 | 27 M 0414 |
| 28 M 0591 | 01 N 0537 |
| 08 N 0698 | 03 O 0508 |
| 11 O 0897 | 14 O 0616 |
| 17 O 0981 | 18 O 0003 |
| 06 P 0269 | 33 P 0808 |
| 16 Q 0243 | 18 Q 0237 |
| 21 Q 0304 | 24 Q 0934 |
| 02 R 0339 | 15 R 0408 |
| 20 R 0658 | 22 R 0585 |
| 24 R 0296 | 33 R 0665 |
| 16 S 0422 | 26 S 0357 |
| 26 S 0831 | 29 S 0002 |
| 31 S 0423 | 07 T 0972 |
| 21 T 0926 | |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

# ஈரான்மீது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஈரான்-ஈராக் சண்டையில் ஈராக்குக்கு உதவ ஜோர்தான் முன்வந்துள்ளது.

ஈராக்-ஜோர்தான் எல்லையில் ஈராக்கின் அழைப்பை எதிர்பார்த்து, யுத்த தாங்கிகள், ஏவுகணைகளுடன் நாற்பதினாயிரம் துருப்புகளை ஜோர்தான் தயார் நிலையில் வைத்திருப்பதாக குவைத்திலிருந்து வெளிவந்த செய்திகள் தெரிவித்தன.

இன்று காலை ஈரானின் அபுடான் எண்ணை நிலையம்மீது ஈராக் மிக்விமானங்கள் குண்டு வீச்சு நடத்தின என்றும் இரண்டு ஈராக் விமானங்கள் சுட்டு விழ்த்தப்பட்டன என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேநேரத்தில், தென்மேற்கு 'ஈராக்கில் ஈரானிய விமானங்கள் இன்று காலை குண்டுமாரி பொழிந்தன என்றும் ஈராக் டாங்கிகள் சில நாசமாகின என்றும் தெஹ்ரான் வானொலி அறிவித்தது.

ஈராக்கிலிருந்து இந்தியர்கள் தொடர்ந்து வெளியேறிவருகின்றனர். நேற்று குவைத்திலிருந்தும் அம்மானிலிருந்தும் ஏராளமான இந்தியர்கள் தாயகம் புறப்பட்டனர். இவர்களை அழைத்துச்செல்ல ஏர்இந்திய விமானம் விசேஷ சேவைகளை நடத்தியது.

# சோ[illegible]யத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சோவியத் யூனியன் ஈரானுக்குள் பிரவேசிக்கும்படி தூண்டப்பட்டாலும், பாரசீகவளைகுடா பிராந்தியத்தை சோவியத் யூனியன் பாதுகாக்க முயன்றாலும் அது அமெரிக்க பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என்றும் திரு. கார்ட்டர் கூறினார். (இ)

# கிளிநொச்சி குருகுலத்தில் இந்து போதகர் பயிற்சி

(கிளிநொச்சி)

இந்துப்போதகருக்கான இலவச பயிற்சித்திட்டமொன்று இம்மாதம் 19-ம் திகதி நடைபெறவிருக்கும் விஜயதசமியிலன்று ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

கிளிநொச்சிக் குருகுலத்தால் நடாத்தப்படும் இப் பயிற்சித்திட்டம் மூன்று வருடங்களுக்கானது என்றும் சாதி, சமய வேறுபாடின்றி சகலருக்கும் இப்பயிற்சி அளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுக்கல்வித் தராதரம், சாதாரணதரம், உயர்தரம் சித்தியடைந்த ஆண், பெண் இருபாலார்களிடையேயும் 20 பேர் தெரிவுசெய்யப்பட்டு, இந்து தத்துவப் பயிற்சியுடன் பொருளாதாரம், உளவியல், நிர்வாகம், தர்க்கம், தத்துவ மாத்திரம், சமூகவியல் முதலியவற்றில் விசேட பயிற்சி அளிக்கப்படும். இவர்கள் அநுபூதியாளர்களாகி கிராமங்கள் தோறும் இந்துபோதகர்களாக நியமிக்கப்படுவதுடன் வெளிநாடுகளிலும் கடமையாற்றுவர்.

தமிழ், ஆங்கிலம், சிங்களம், சமஸ்கிருதம் ஆகிய நான்கு பாஷைகளில் வேதபாராயணம் திருமுறை யோதல் போதிக்கப்படும். பயிற்சிக் காலத்தில் வாழ்வுப் பயிற்சி சுயநம்பிக்கை' பயிற்சி, பல தொழிற்பயிற்சி பெறுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஊரெழு)

குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் இம்மாதம் 11ம் திகதி சனிக்கிழமை "மாவட்டசபையும் தமிழர் விடுதலை உணர்வும்" என்ற தலைப்பில் கருத்தரங்கொன்று நடைபெறவிருக்கிறது.

# இன்றைய பலன்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

துலாம்: பேச்சுவன்மையால் பிறருடைய நன்மதிப்பைப் பெறுவீர்கள், கல்வித்துறையில் திருப்திகரமான முன்னேற்றம் உண்டு, சிலருக்கு அதிர்ஷ்டலாபமும் கிடைக்கலாம், சிறப்பான தினம்.

விருச்சிகம்: தற்பெருமை மூலம் தடுமாற்றம் ஏற்படும், கண்துடைப்பு வேலையும் நடக்கும், எதிலும் கவனஞ் செலுத்தவும், பெரியோரைப் பகைத்துக்கொள்ளாமல் பெருமையைப் பேணி நடக்கவும்.

தனுசு: அன்னையின் அன்பு தாராளமாகக் கிடைக்கும், செய்காரியங்களில் தனிப்புகழ் பரவும், முயற்சியால் முன்னேற்றத்திற்கும் இடமுண்டு, கல்விப்பணி செல்வாக்கைவளர்க்கும்.

மகரம்: இதயத்தின் ஏக்கம் இன்று கனியும், தேடிய பொருள் காலடியில் சரணடையும், பரோபகார சிந்தை மேலிடும், நண்பர் ஒருவருக்குக் கைகொடுத்து உதவுவீர்கள், செல்வாக்கும் பெருகும்.

கும்பம்: பக்கத்தில் படுகுழி தோண்டப் பகைவர் காத்திருப்பர், முகமன் கூறுவோர் விடயத்தில் எச்சரிக்கையுடன் இருக்கவும்.

மீனம்: குடும்பத்தில் உறவு முறை சுமுகமாக இருக்கும், கலைஞர்களுக்கு புதிய சிந்தனைகள் உருவாகும், இன்று சுப தினம்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# யாழ். ஆஸ்பத்திரி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிறை 3¾ றுத்தல், 3-ம் குழந்தையின் நிறை 4 றுத்தல்.

3 குழந்தைகளும், தாயும், சுகமாக 2-ம் வார்ட்டில் இருக்கின்றனர்.

இக் குழந்தைகளின் தந்தையான செல்லையா கல்லுடைக்கும் ஓர் ஏழைத் தொழிலாளி. நாளாந்தம் உழைத்துத்தான் சீவியம் நடத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

இன்னும் குழந்தைகளுக்குப் பெயர் சூட்டவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இக்குழந்தைகளைக் காப்பாற்ற, இந்த ஏழைக் குடும்பத்திற்குப் பண உதவி வழங்குமாறு வர்த்தகர்களும், பொது மக்களும் முன்வர வேண்டும் என டாக்டர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)

## மரண அறிவித்தல்

### இ. ஸ்ரீமுருகானந்தன்

மூளாய் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் ஸ்ரீமுருகானந்தன் அகால மரணமானார். இவர் இளையதம்பி பார்வதியின் அன்புமகனும் தனலட்சுமி, கணேசானந்தன், வித்தியானந்தன், சீதாலட்சுமி, விஜயராணி, பவானந்தன், கோபாலச்சந்திரன், யோகானந்தன், மகிலானந்தன், நவறஞ்சினி ஆகியோரின் சகோதரரும் மகாலிங்கத்தின் மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் 8-10-80 புதன் காலை 10 மணிக்கு மூளாய் பித்தனை மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.
7029

## மரண அறிவித்தல்

### நாகநாதர் தம்பிப்பிள்ளை

வேலணை கிழக்கைச் சேர்ந்த நாகநாதர் தம்பிப்பிள்ளை காலமானார். இவர் இளையபிள்ளையின் அன்புக் கணவரும், காங்கேசுவின்மைத்துனரும், அன்னலட்சுமி, பகவதி (ஆசிரியை), சிவபாக்கியம் (ஆசிரியை). திருநாவுக்கரசு, சிதம்பரநாதன் B. A. (விலைக் கட்டுப்பாட்டுப் பரிசோதகர்- யாழ்ப்பாணம்), சித்திரவேல் B. A. (கிராம அபிவிருத்தி அதிகாரி, மட்டக்களப்பு), கைலாசநாதன், (பாலசரோஜா ஸ்ரோர்ஸ், கொழும்பு), ஆகியோரின் அன்புத் தந்தையும், சபாரத்தினம், இரத்தினம் (ஆசிரியர்), மாணிக்கவாசகர் (ஆசிரியர்), இராசேஸ்வரி, கனகசுந்தரி B. A. (ஆசிரியை), புஷ்பா B. A. (ஆசிரியை) ரமணி ஆகியோரின் அன்பு மாமனருமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று (8-10-80) பிற்பகல் 2 மணிக்கு வேலணை கிழக்கிலுள்ள சாட்டி மயானத்தில் நடைபெறும். உறவினர்களும், நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.
7030

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் அக். 8-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under No. G 3 8948/78 The Eelanaadu P. B. No. 49, Telegram Eelanaadu, Phone. 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org